www.tamilarangam.net

677

# தமிழ் ஈழம் பற்றி பேரவையின் பதில்கள்

- புதிய ஜனநாயகப் புரட்சியை முன்னெடுத்துச் செல்வோம்



## தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவை இலங்கை

தமிழ்த தேசிய ஆவணச சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் ஈழம் பற்றி
பேரவையின் பதில்கள்

முதல் பதிப்பு 1987 மே

தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவை
இலங்கை

# பிரிவினைகோரும் போராளிகளுக்கு பேரவையின் பதில்கள்.

இலங்கையில் இன்று நிலவும் இன ஒடுக்கு முறைக்குத் தீர்வாக தமிழ்ஈழம் என்னும் தனிநாட்டுப் பிரிவினையைக் கோரும் போராளிகளின் சிந்தனையைத் தூண்டுவதற்காக இந்நூலை வெளியிடுகின்றோம். பிரிவினைக் கோரிக்கையைப் பரிசீலிக்கவும், சரியான பாதையைத் தேர்ந்தெடுக்கவும் இவ் வெளியீடு உதவியாக அமையும் என நம்புகிறோம்.

## பிரச்சினையின் சாராம்சமும் பேரவையின் அணுகுமுறையும்

150 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையைச் சுரண்டிக் கொள்ளையடித்து வந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் 1948ல் ஆட்சி அதிகாரத்தை உள்நாட்டு நிலப்பிரபுக்கள், பெரு முதலாளி வர்க்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் வாதிகளிடம் கைமாற்றிச் சென்றது. இதனால் ஏகாதிபத்தி யத்தின் நேரடிச் சுரண்டலில் இருந்து இலங்கை மக்கள் விடு பட்டாலும் அந்நிய சுரண்டல் கொள்ளையை அனுமதிக்கும் உள்நாட்டுப் பிற்போக்கு வர்க்கங்களே ஆதிக்கத்திற்கு வந்த தால் இலங்கை மக்களின் வாழ்க்கையில் புரட்சிகரமான மாற்றம் எதுவுமே ஏற்படவில்லை. மாறாக மேலும் மேலும் துயரங்களுக்கே உள்ளாகினர். இதனால் ஆளும் பிற் போக்கு வர்க்கங்களுக்கு மக்களிடமிருந்து கடும் எதிர்ப்புகள் உருவாயின. அதே வேளையில் ஆளும் பிற்போக்கு வர்க்கங் களுக்குள்ளாகவே சுரண்டல் கொள்ளையை நடத்துவதில் தவிர்க்க முடியாத போட்டி மேலும் வளர்ந்தது. பிற்போக்கு வர்க்கங்களின் இயல்பே ஒருபுறம் மக்களைச் சுரண்டிக் கொள்ளையடிப்பதும், மறுபுறம் தனக்குள்ளிருக்கும் போட்டி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாளர்களை நசுக்குவதும், அதன்மூலம் தன்னைநிலைநாட்டிக் கொள்வதும்தான். இதற்கு இலங்கையில் நிலவும் தேசிய இன வேறுபாடுகள் ஆளும் பிற்போக்கு வர்க்கங்களுக்கு மிகச் சிறந்த கருவியாகத் திகழ்ந்தது.

மக்கள் தொகையில் சிறுபான்மையினராகிய தமிழர்கள் இலங்கைப் பொருளாதாரத்தில் மிகமுக்கிய இடம்வகித்தனர். பெரும் தொழில் அதிபர்களாக விளங்கியது மட்டுமின்றி அரசு எந்திரம், கல்வித்துறை போன்ற வற்றிலும் மிக முக்கிய மான இடத்தை வகித்தனர். சிங்களப் பிரதேசங்களில் வணிக நிலையங்கள் நிறுவிப் பெரும் இலாபம் சம்பாதித்தனர். தமிழ் இனத்தில் உள்ள தனது போட்டியாளர்களை நசுக்கமுடியாத சிங்களசுரண்டும் ஆதிக்கப் பிரிவு சிங்கள மக்களிடையே இன வெறியைத் தூண்டினர். பெருந் தேசிய இனவாதத்தை தமிழ் இனத்திற்கு எதிராக தூண்டினர். அரசியல், கல்வி, மொழி, கலாச்சாரம் அனைத்து துறைகளிலும் தமதுஇன ஆதிக்கத்தை ஏற்படுத்த திட்டமிட்டுச் செயற்பட்டனர். இது இரண்டு வகையில் அவர்களுக்குப் பயன்பட்டது. முதலாவது, சுரண்டும் வர்க்கங்களால் நலிவுற்று இருந்த சிங்கள உழைக்கும் மக்கள் சுரண்டும் ஆதிக்க வர்க்கங்களை எதிர்த்துப் போராடுவதில் இருந்து இனவாதத்திற்குத் திசை திருப்பப் பட்டனர். இதனால் சிங்களப் பிற்போக்கு ஆளும் வர்க்கங்கள் உழைக் கும் மக்களின் போராட்டப் புயலில் இருந்து தற்காலிகமாக தப்பிக்க முடிந்தது. இரண்டாவதாக தமிழர்களின் உடைமை கள் அழிக்கப்பட்டு அவைகளுக்கு கடும் சேதங்கள் விளை வித்து அச்சத்திற்குள்ளாக்கப்பட்டதால், தமக்கு எதிரான தமிழ் இன போட்டியாளர்களை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. அய்க்கிய தேசிய கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இலங்கையின் பெருந் தேசிய இனவாதக் கட்சிகளாக செயல்பட்டு வருகின்றன. இதன்மூலம் சிங்கள பிற்போக்கு வர்க்கங்களின் நலன்களை அவை பிரதிநிதித்துவப் படுத்துகின்றன.

இலங்கையில் தமிழ் இன முதலாளிகள் தம்மை தற்காத் துக் கொள்ளவும் சிங்களப் போட்டியாளர்களுடன் ஓர் உடன் பாட்டுக்கு வரவும் சிங்களப் பெருந் தேசிய இன ஒடுக்கு முறையை எதிர்த்துப் போராட வேண்டிய அவசியம் ஏற் பட்டது. அதே நேரத்தில் இலங்கையில் இருந்து தமிழர்கள் வாழும் பகுதியைத் தனி நாடாகப் பிரிப்பதும் அவர்களுடைய நலனுக்கு உகந்ததாக இல்லை. தனிநாட்டுக் கோரிக்கை



இலங்கை முழுவதுமான பரந்த சந்தையை இழப்பதில் கொண்டு போய் விடுமாகையால் தனிநாடு கோராமலேயே அய்க்கியப்பட்ட இலங்கைக்கு உள்ளாகவே இன ஒடுக்கு முறையை எதிர்ப்பதும், ஒடுக்கும் சிங்கள தேசிய இன முதலாளி வர்க்கத்துடன் ஓர் உடன்பாட்டுக்கு வருவதும் அவர்களுடைய நோக்கமாக இருந்தது. ஆனால் இனவெறி சிங்கள அரசின் தாக்குதல்களும், ஒடுக்குமுறையும் மேலும் மேலும் அதிகரித்த போது மொழி, கல்வி, மதம், அரசியல் ஆகிய அனைத்து துறைகளிலும் நடுத்தர வர்க்கம் கடுமை யாகப் பாதிக்கப்பட்டது.

எனவே இன ஒடுக்கு முறையை எதிர்த்து அதிலிருந்து மீள்வதற்கு தனிநாடு—தமிழ் ஈழம்—பெறுவது தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்தனர். இதன் விளைவாகவே தமிழ் ஈழ விடுதலை இயக்கம், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்கள் மத்திய தர வர்க்கத்தில் இருந்து தோன்றின. சாராம்சமாக சிங்கள தேசிய இனத் திற்கும், தமிழ் தேசிய இனத்திற்கும் இடையில் நடக்கும் போராட்டம் சிங்கள ஆளும் வர்க்கங்களுக்கும், தமிழ் தேசிய இன முதலாளிய, குட்டி முதலாளியப் பிரிவுகளுக்கும் இடையி லான போராட்டமேயாகும். குட்டி முதலாளியப் பிரிவினர் தமிழ் ஈழ தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து ஆயுதப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் போது தமிழ் தேசிய இன பெரு முதலாளிகள் பிரிவினர் அகிம்சா வழியைப் போதித்துக் கொண்டிருக்கின்றனர்.

தேசிய இன ஒடுக்கு முறை எனபது முதலாளிய, குட்டி முதலாளிய பிரிவினரை மட்டுமல்ல பாட்டாளி வர்க்கத்தை யும், சகல பகுதி உழைக்கும் மக்களையும் தாக்குகின்றது. எனவே சிங்களப் பெருந்தேசிய இன ஒடுக்கு முறையை எதிர்த்து தமிழ் தேசிய இனத்தின் சம உரிமைக்காகப் போராடுவது பாட்டாளி வர்க்கத்துக்கு தவிர்க்க முடியாத தேவையாகும். மேலும் இன ஒடுக்கு முறை பாட்டாளி வர்க்கத்தை மற்றொரு வழியிலும் பாதிக்கின்றது. பாட்டாளி வர்க்கம் தனதுவர்க்க எதிரிகளை எதிர்த்து வர்க்கப் போராட் டத்தை நடத்துவதற்குப் பதிலாக தேசிய இனப்பிரச்சினை யில் திசை திருப்பப்பட்டு இனவாதத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இது வர்க்கப் போராட்டத்தை முனை மழுங்கச் செய்வதாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எனவே தேசிய இன ஒடுக்கு முறையை எதிர்த்துப் போராடுவது பாட்டாளி வர்க்கத்துக்கு இரண்டு வகையில் அவசியப்படுகின்றது. ஆனால் இன ஒடுக்கு முறைக்கு எதிராக பாட்டாளி வர்க்கம் நடத்தும் போராட்டம் முதலாளிய வர்க்கம் நடத்தும் போராட்டத்தில் இருந்து வேறுபட்டதாகும். பாட்டாளி வர்க்கத்தின் நோக்கம் இன ஒடுக்கு முறையை ஒழித்துக் கட்டுவதுடன் நிற்பதில்லை. மாறாக சுரண்டும் வர்க்க சமுதாய அமைப்பை வீழ்த்தி ஒரு புதிய ஜனநாயக சமுதாய அமைப்பையும் பின்னர் சோசலிஸ சமுதாய அமைப்பையும், பொதுவுடமை சமுதாய அமைப்பையும் நிறுவுவது ஆகும். எனவே இன ஒடுக்கு முறையை எதிர்த்து தேசிய இனங்களின் முழு ஜனநாயக உரிமைக்கு போராடும் அதே வேளையில் ஒடுக்கும் ஆளும் வர்க்கப் பிரிவுகளுக்கு எதிராக அனைத்து தேசிய இன உழைக்கும் மக்களின் ஒற்றுமைக்காகவும் போராடுகின்றது. அத்தகைய ஒற்றுமை இன்றி சுரண்டும் சமுதாய அமைப்பையும், அதைக் கட்டிக் காக்கும்ஆளும் வர்க்கத்தையும் வீழ்த்திபுதியதொரு ஜனநாயக சமுதாயம் அமைப்பதை நோக்கி முன்னேற முடியாது.

ஆனால் முதலாளி வர்க்கம் இனஒடுக்கு முறையைஎதிர்த்து போராடுவதன் நோக்கம்-அதுபிரிந்துபோகும் கோரிக்கையை வைத்துப் போராடிக் கொண்டிருக்கின்ற போதிலும்-ஒடுக்கும் தேசிய இன ஆளும் வர்க்கங்களுடன் ஒரு ஒப்பந்தத்துக்கு வருவதேயாகும். இத்தகைய ஒப்பந்தங்கள் பிரிவினையை ஏற்றுக் கொண்டிருந்த போதிலும் கூட அவை பாட்டாளி வர்க்கத்துக்கும், அதன் இலட்சியத்திற்கும் எதிரானவையாகவே இருக்கும். தேசிய இனப் பிரச்சினையில் ஒடுக்கும், ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் முதலாளிய வர்க்கங்கள் தமது தேசிய இன கோரிக்கைகளுக்காகவே உழைக்கும் மக்களை அணிதிரட்டுகின்றன. இதன் மூலம் வேறுபட்ட தேசிய இனங்களைச் சேர்ந்த உழைக்கும் மக்கள் பிளவுபடுத்தப்பட்டு ஒருவருடன் ஒருவர் மோதவிடப் படுகின்றனர்.

சுரண்டும் ஆதிக்க வர்க்கத்தை எதிர்த்த அவர்களுடைய அய்க்கியப்பட்ட போராட்டத்தில் இருந்து, திசை திருப்பப் படுகின்றனர். இதனால் பாட்டாளிவர்க்கம் தனதுஇலட்சியத்தை நோக்கி முன்னேறுவது தடைப் படுத்தப் படுகின்றது. எனவே தான் பொதுவுடமை வாதிகள் ஒடுக்கும் தேசிய இனத்தின் ஆதிக்கத்தை எதிர்த்து தேசிய இனங்களின் முழுசமத்துவத்திற்கும் போராடும் அதே வேளையில், பல்வேறு தேசிய இனங்களின் பாட்டாளி வர்க்கத்தின், உழைக்கும் மக்களின் அய்க்கியத்திற்காகவும் போராடுகின்றனர். இந்தகைய அய்க்கியம் இன்றி பாட்டாளி வர்க்கம் மூலாளி வர்க்கத்தையும் அதன் தில்லு முல்லுகளையும் முறியடிக்க முடியாது.



தேசிய இனங்களின் முழுச்சமத்துவத்திற்கான போராட்டம் என்பது தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமைக்கான போராட்டமேயாகும். எந்த ஒருதேசியஇனமும்தனித்துநின்று தனி அரசாக தன்னை அமைத்துக் கொள்ளவோ அல்லது ஒரு கூட்டாட்சியிலிருந்து பிரிந்து மற்றொன்றுடன் இணைந்து கொள்ளவோ அல்லது தானே விரும்பி ஏதேனும் ஒரு கூட்டாட்சியுடன் தன்னை இணைத்துக் கொள்ளவோ உள்ள ஜனநாயக உரிமையாகும். இத்தகைய உரிமை மட்டுமே எந்த ஒரு தேசிய இனமும் மற்றொரு தேசிய இனத்தை ஒடுக்குவதை சாத்தியமற்றதாக்கும். தேசிய இனங்களின் பிரிந்து போகும் உரிமையை மறுத்துவிட்டு தேசிய இனங்களின் சமத்துவம் பற்றிப் பேசுவது தேசிய இன ஒடுக்கு முறையை ஆதரிப்பதாக மட்டுமே இருக்கும். ஒவ்வொரு தேசிய இனமும் தனியே பிரிந்து சென்று தனி ஓர் அரசாக அமைவதற்கு முழு ஜனநாயக உரிமையும் உண்டு என்பதையும் அத்தகைய உரிமைக்கான போராட்டத்தையும் பொதுவுடமை வாதிகள் ஏற்றுக் கொள்கின்றனர். அதே நேரத்தில் ஒரு தேசிய இனம் பிரிந்து செல்வதை எல்லா நிலைகளிலும் பொதுவுடமை வாதிகள் ஆதரிப்பதுமில்லை. பிரிந்து போவதற்கான உரிமை என்பதும் பிரிந்து போவது என்பதும் வெவ்வேறான விடயங்கள் என்பதில் அவர்கள் தெளிவாக இருக்கிறார்கள்.

ஒரு தேசிய இனம் பிரிந்து போவதை இரண்டு கட்டங்களில் மட்டுமே பொதுவுடமை வாதிகள் ஆதரிக்கின்றனர். பல்வேறு தேசிய இனங்களும் இணைந்திருக்கும் ஓர் அரசமைப்பிற்குள் ஒரு பிற்ப் போக்கான தேசிய இனத்தின் ஆளும் வர்க்கம் மற்றொரு தேசிய இனத்தின் சுதந்திரமான வளர்ச்சிக்கெதிராகவும், தடையாகவும் இருக்குமாயின் அப்போது அந்த தேசிய இனம் தனியாகப் பிரிந்து செல்வதை பொதுவுடமை வாதிகள் ஆதரிப்பர். எடுத்துக்காட்டாக அயர்லாந்து பிரிட்டிஷ் முடியாட்சியை எதிர்த்து சுதந்திரத்திற்காகப் போராடிய போது அது பிரிந்து செல்வதை மார்ஸ் ஆதரித்தார். அது போல் 19ம் நூற்றாண்டின் மத்தியில் இரஷ்ய நிலப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரபுத்துவ இரா்ணுவ அதிகாரத்தை எதிர்த்து போலந்து தேசிய இனம் போராடியபோது அது பிரிந்து போவதையும் மார்க்ஸ் ஆதரித்தார்.

அடுத்து ஏகாதிபத்தியங்களால் காலனிகளில் அடக்கி ஒடுக்கப்பட்டிருக்கும் தேசங்கள் தமது விடுதலைக்கும், சுதந்திரத்திற்கும் போராடும்போது அவை ஏகாதிபத்திய ஆட்சி அதிகாரத்தில் இருந்து பிரிந்து தனிஅரசாக அமைவதை பொதுவுடமைவாதிகள் ஆதரிப்பர். ஏகாதிபத்தியத்தை எதிர்த்து விடுதலைக்காகப் போராடும் தேசம் சோசலிஸத்தையோ, குடியாட்சியையோ ஏற்றுக் கொள்ளாமல் ஒரு பிற்போக்கான சமுதாய அமைப்பைக் கட்டிக் காத்துக் கொள்வதற்காகவே போராடுகின்றதெனினும் உலகின் முதல் எதிரியாக உள்ள ஏகாதிபத்தியத்தை இப் போராட்டம் பல வீனப்படுத்துகிறது. அதன் மூலம் உலகப் புரட்சிகர இயக்கத்துக்கு பலம் சேர்க்கிறது என்பதால் அதைப் பொதுவுடமைவாதிகள் ஆதரிப்பர். எடுத்துக் காட்டாக ஆப்கானிஸ்தான் சுதந்திரத்திற்காக அமீர் மன்னன்- அவனுடைய நோக்கம் முடியாட்சி முறையைக் காட்டிக் காப்பதுதான்-போராடியபோது பொதுவுடமை வாதிகள் அதை ஆதரித்தனர்.

தேசிய இனங்களின் பிரிந்து போகும் உரிமை உள்ளிட்ட சுய நிர்ணய உரிமையை பொதுவுடமை வாதிகள் ஆதரிப்பதன் காரணம் அது தேசிய இனங்களின் ஜனநாயக உரிமை என்பதாலும், இந்த உரிமை வரலாற்று ரீதியில், சமுதாய வளர்ச்சியில் ஒரு முற்போக்கான பாத்திரம் ஆற்றுகின்றது என்பதாலுமேயாகும். அதே நேரத்தில் அந்த உரிமையைப் பயன்படுத்தி ஒரு தேசிய இனம் பிரிந்து போவது வரலாற்று ரீதியில் பிற்போக்கான பாத்திர மாற்றுவதற்குத்தான் பயன்படுமெனில் அவ்வுரிமையை அங்கீகரிக்கும் அதேநேரத்தில் அது பிரிந்துசெல்வதை பொதுடவுமைவாதிகள் ஆதரிக்கமாட்டார்கள். அதாவது தேசிய இனங்களின் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுய நிர்ணய உரிமையை ஆதரிக்கும் அதே நேரத்தில் ஒரு தேசிய இனம் பிரிந்து போவது பாட்டாளி வர்க்கத்தின் அய்க்கியத்திற்கும் அதன் இலட்சியங்களுக்கும் எதிரானதாக இருக்குமாயின் அந்தத் தேசிய இனம் பிரிந்து போவதை பாட்டாளி வர்க்கம் ஆதரிக்காது.

எடுத்துக்காட்டாக ஒரு தேசிய இனம் பழைய சமுதாய அமைப்பிற்கு திரும்பச் செல்வதற்கோ அல்லது பழைய



சமுதாய அமைப்பைக் கட்டிக் காப்பதையோ பல்வேறு தேசிய இனங்கள் இணைந்திருக்கும் ஒரு முற்போக்கான கூட்டமைப்பிலிருந்து பிரிந்துசெல்ல விரும்புமாயின் அதை பொதுவுடமை வாதிகள் ஆதரிக்கமாட்டார்கள். போலிஷ் இனம் 19ம் நூற்றாண்டின் இறுதியில் இரஷ்யக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து செல்வதை பொதுவுடமைவாதிகள் ஆதரிக்கவில்லை. ஏனெனில் 50 ஆண்டுகளில் நிகழ்ந்த பல்வேறு மாற்றங்கள் இரஷ்யாவையும் போலந்தை பொருளாதாரரீதியிலும், கலாசாரரீதியிலும் நெருக்கமாகக் கொண்டு வந்திருந்தது.

மற்றொரு எடுத்துக்காட்டாக 1840-50ம் ஆண்டுகளில் ஹங்கேரியர்கள், போலிஷ் மக்கள் என்ற இரு தேசிய இனங்களின் விடுதலை இயக்கங்களை ஆதரித்த மார்க்ஸ், செக்குகள், தெற்குஸ்லாவியர்கள் என்ற இரு தேசிய இனங்களின் விடுதலை இயக்கங்களை எதிர்த்தார். ஏனெனில் ஹங்கேரியர்களும், போலிஷ் மக்களும் புரட்சிகரமான தேசிய இனங்களாக இருந்தனர். அதேநேரத்தில் செக்குகளும், ஸ்லாவியர்களும் ஜார் எதேச்சாதிகார ஆட்சிக்கு உதவி செய்யும் அவுட் போஸ்ட்களாக இருந்தனர். இவர்களுக்கு ஆதரவு தருவது என்பது ஜாரிசத்திற்கு மறைமுகமாக ஆதரவு காட்டுவதாக அமையும். அப்போது ஜாரிசம் அய்ரோப்பிய புரட்சிகர இயக்கத்துக்கு விரோதியாக இருந்தது.

சோசலிஸம், புரட்சி, தீவிர ஜனநாயகம், குடியரசு என்ற எத்தகைய முழக்கங்களைப் பொறித்துக் கொண்டவர்களாக இருப்பினும் அவர்கள் நடத்தும் போராட்டம் ஏகாதிபத்தியத்துக்கு மெருகு பூசி பலப்படுத்துவதாய் இருக்குமாயின் அதைப் பொதுவுடமைவாதிகள் ஆதரிக்க மாட்டார்கள். (உ-ம்) கெரண்ஸ்க்கி ஏகாதிபத்திய யுத்தக் கா்லத்தில் நடத்திய போராட்டம்.

எனவே தேசிய இன ஒடுக்கு முறைக்கு எதிராக போராடும் ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் எல்லாவிதக் கோரிக்கைகளையும் பொதுவுடமைவாதிகள் நிபந்தனையின்றி ஆதரிப்பதில்லை என்பது தெளிவு. ஏனெனில் தேசிய இன ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டத்தில் முதலாளி வர்க்கத்தின் நோக்கங்கள், கொள்கைகளுக்கும் பாட்டாளி வர்கத்தின் நோக்கங்கள், கொள்கைகளுக்கும் அடிப்படையிலேயே வேறுபாடு உண்டு, இரண்டும் இரு வேறு போக்குகளின் கோட்பாடுகளை அடிப்படையாய் கொண்டிருக்கின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் முதலாளிய வர்க்கம் (1) தனது தேசிய இனத்திற்கு விசேச உரிமைகளும், ஆதாயங்களும் வேண்டும் என்ற ரீதியிலேயே தேசிய இனப் பிரச்சினையை அணுகுகின்றது. (2) பிற தேசிய இனங்களின் நிலை எதுவாயிருப்பினும் அது தனது சொந்த நலன்களுக்கு மட்டுமே உத்தரவாதம் தேடுகின்றது. (3) மற்ற தேசிய இனங்களின் முதலாளி வர்க்கத்துடன், பாட்டாளி வர்க்கத்திற்கு பாதகமான முறையில் உடன்பாட்டுக்கு வரும் கொள்கையைப் பின்பற்றுகின்றது. (4) வர்க்கப் போராட்டத்தை முனை மழுங்கச் செய்து தேசிய இனப் பிரச்சினையை மேலும் கூர்மைப்படுத்துகின்றது.

ஆனால் பாட்டாளி வர்க்கம் இதற்கு நேர்எதிராக இருக்கின்றது. (1) தேசிய இன ஒடுக்கு முறைக்கு எதிராக முதலாளி வர்க்கம் எந்த அளவிற்கு தீவிரமாய்ப் போராடுகிறதோ அந்த அளவிற்கு அப்போராட்டத்தை ஒவ்வொரு கட்டத்திலும் உறுதியாய் ஆதரிக்கின்றது. (2) ஒடுக்கும் தேசிய இனத்தின் விசேட உரிமைகளுக்கும், பலாத்காரங்களுக்கும் எதிராகப் போராடும் அதே வேளையில் ஒடுக்கப்பட்ட தேசிய இனம் தனக்கு விசேச உரிமைகள் வேண்டுமெனக் கேட்பதையும் எதிர்க்கிறது. (3) எந்த இனத்திற்கும் சாதகமாகவோ, பாதகமாகவோ இல்லாமல் எல்லாத் தேசிய இனங்களுக்கும் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டுமென கோருகிறது. (4) சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் அதே வேளையில் எல்லாத் தேசிய இனங்களின், பாட்டாளிகளின் அய்க்கியத்தையும் முதன்மையாகக் கருதுகிறது. (5) எந்த ஒரு தேசியக் கோரிக்கையையும், எந்த ஒரு பிரிவினையையும் பாட்டாளி வர்க்கப் போராட்ட நலன் என்ற கோணத்திலிருந்தே மதிப்பிடுகின்றது. (6) தேசியம் என்பது முதலாளித்துவத்துடன் தோன்றியது. தேசிய இனப் பிரச்சினை முதலாளித்துவத்தின் அழிவில்தான் முற்றாக தீரும் எனினும் தேசிய இன முரண்பாடுகளை கூர்மழுங்கச் செய்வதும். தேசிய இனங்களுக்கு இடையில் ஏற்படும் பூசல்களுக்கான அடிப்படைகளை நீக்குவதும், அப்பூசல்களை எந்தளவிற்கு முடியுமோ அந்தளவிற்கு குறைப்பதும் பாட்டாளிவர்க்கத்தின் நோக்கமாக இருக்கிறது.

தேசிய இனப் பிரச்சினையில் பாட்டாளி வர்க்கம் ஒரு குறிப்பிட்ட வகையில் மட்டுமே முதலாளிவர்க்கத்தை ஆதரிக்கின்றது. தேசிய அமைதி, சம உரிமைகள், வர்க்கப் போராட்டத்திற்குச் சிறந்த நிலைமைகள் ஆகியவற்றைப் பெறும் நோக்கத்துடன் மட்டுமே பாட்டாளிவர்க்கம் முதலாளி வர்க்கத்தை ஆதரிக்கின்றது. எனவே தேசிய இனப்பிரச்சினையில் முதலாளிவர்க்கத்திற்குப் பாட்டாளி வர்க்கத்தின் ஆதரவு நிபந்தனையோடு கூடியதாகும். ஒடுக்கப்படும் தேசிய இனம் ஒடுக்கு முறைக்கு எதிராக நடத்தும் போராட்டத்தில் உள்ள பொதுவான ஜனநாயகத் தன்மையைமட்டுமே பாட்டாளி வர்க்கம் நிபந்தனை ஏதுமின்றி ஆதரிக்கின்றது. இந்த ஜனநாயகம் முதலாளி வர்க்கத்தின் தேசிய தனித்துவத்திலிருந்து முற்றிலும் வேறானதாகும். எனவேதான் பாட்டாளி வர்க்கம் தேசிய இனப்பிரச்சினையை அணுகும்போது எல்லாத் தேசிய இனங்களுக்கும் சம உரிமை, எல்லாத்தேசிய இனங்களுக்கும் சுய நிர்ணய உரிமை, எல்லாத் தேசிய இனங்களையும் சேர்ந்த பாட்டாளிகளுக்கு இடையில் ஒற்றுமை என்ற கொள்கைகளின் அடிப்படையிலேயே அணுகுகின்றது. நிபந்தனை இன்றி பிரிவினையை ஆதரிப்பது அல்லது எதிர்ப்பது என்ற முதலாளிய தேசிய வாதக் கண்ணோட்டத்திலிருந்து அணுகுவதில்லை. இந்த அடிப்படையிலேயே இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை அணுக வேண்டும்.



இலங்கையில் பூர்வீகத் தமிழர்களுக்கும், மலையகத் தமிழர்களுக்குமிடையே பொதுவான வாழ்க்கை முறையோ, பிரதேசமோ இல்லை. எனினும் பூர்வீகத் தமிழர்கள் ஒரு தேசிய இனமாக வாழ்ந்து வருகின்றனர். தோழர் ஸ்டாலின் ஒரு தேசிய இனத்திற்குக் கூறிய வரையறைகள் ஒரு தேசமென்பது ஒரு பொதுவான . மொழி, ஆட்சிப்பகுதி, பொருளாதார வாழ்வு மற்றும் மன இயல்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வரலாற்றுப் பூர்வமாக உருவாகிய நிலையான மக்கள் சமூகமாகும் என வரையறுத்தார். இது பூர்விகத் தமிழர்களுக்கு முற்றிலும் பொருந்தியுள்ளன. இவர்கள் வாழும் பகுதியே தனி நாடாக வரையறுக்கப்பட்டு தமிழ்ஈழம் என பிரிவினைவாத சக்திகளால் அழைக்கப்படுகின்றது.

இன்று தமிழ் தேசிய இனம் சிங்கள தேசிய இனத்திற்கு சமமாக வைக்கப்படவில்லை. உரிமைகள் மறுக்கப்பட்டு இரண்டாந்தர குடிமக்களாகவே அவர்கள் நடத்தப்படுகிறார்கள். மேலும் குறிப்பாக மலையகத் தமிழர்களுக்கு குடியுரிமை மறுக்கப்பட்டுள்ளது என்பதோடு பெருந்தேசிய இன

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெறியர்களால் தூண்டி விடப்படும் இனக் கலவரங்களுக்கும் பலியாகி வருகின்றனர். தமிழ் தேசிய இனத்தின் மீதான ஒடுக்கு முறைக்கு இலங்கை இன வெறி அரசே தலைமை தாங்குகின்றது. அது ஒரு இனவெறி பாசிஸ அரசாக இருக்கிறது. இதனால் இலங்கைத் தமிழர்களில் ஒரு பகுதியினர் இவ்வின ஒடுக்கு முறையில் இருந்து மீள தனி நாட்டுக் கோரிக்கையை முன் வைத்து போராடி வருகின்றனர். இந் நிலையில் தமிழ் தேசிய இனத்தின் பிரிந்து போகும் உரிமையை-பிரிவினைக் கோரிக்கை வைப்பதையே-இலங்கை அரசு தடைசெய்து, அதற்கான அமைப்புக்களையும் தடை செய்துள்ளது. பிரிவினை கோருகின்றவர்களுக்கு மரண தண்டனை அளிக்கப்படும் என்று காட்டுமிராண்டித்தனமான சட்டத்தை நிறைவேற்றியுள்ளது.

ஆனால் இலங்கைத் தமிழர்களின் பிரிந்து போகும் உரிமையைத் தடைசெய்ய யாருக்குமே அதிகாரம் இல்லை. ஒரு தேசிய இனம் தனது தலைவிதியைத் தானே தீர்மானித்து கொள்வதற்குள்ள உரிமையை அத்தேசிய இனத்திற்கு வேறு யாரும் மறுக்க முடியாது. இலங்கை அரசின் தடைச்சட்டம் இலங்கைத் தமிழ் தேசிய இனத்தின் ஜனநாயக உரிமையை, சுயநிர்ணய உரிமையைப் பறிப்பதாகும். எனவே இலங்கை இனவெறி அரசின் ஒடுக்கு முறைகளை எதிர்த்துப் போராடும் தமிழ் தேசிய இனத்தின் போராட்டத்தில் உள்ள ஜனநாயகத் தன்மையை யாரும் மறுக்கவோ, ஆதரிக்காமல் இருக்கவோ முடியாது. எனினும் இலங்கையில் இன ஒடுக்கு முறையை எதிர்த்த தமிழ் இன மக்களின் போராட்டம் இரண்டு வேறுபட்ட கண்ணோட்டங்களைக் கொண்டதாகும்.

1. தமிழ் முதலாளிகளின் கண்ணோட்டம், 2. பாட்டாளி வர்க்க கண்ணோட்டம். தமிழ் முதலாளிய, குட்டி முதலாளியப் பிரிவினர் இன ஒடுக்கு முறையை எதிர்க்கப் போராடுவது, தமது இன நலன்களைக் காத்துக் கொள்வதற்காக மட்டுமேயாகும், பிற தேசிய இனங்களின் நலன்கள் பற்றி இவர்களுக்கு அக்கறை இல்லை, அனைத்து தேசிய இனங்களின் சமத்துவம், சுயநிர்ணய உரிமைபற்றி அக்கறை இல்லை, தனி நாடாகப் பிரிவது உட்பட தமது இன நலன் காப்பதற்கான இவர்களுடைய கோரிக்கைகள் சிங்கள இன முதலாளிகளுடன் ஒரு உடன்பாட்டுக்கு—அது பிரிவினையை ஏற்றுக் கொள்ளும் உடன்பாடாகவும் இருக்கலாம்—வருவதை நோக்கமாகக் கொண்டவை.



இதுஇயல்பாக இருதேசிய இனஉழைக்கும் மக்களின் நலன்களுக்கு எதிரானதாகவேஇருக்கும் என்பதில் அய்யமில்லை. இரு தேசிய இனங்களின் பாட்டாளிகளின் அய்க்கியத்துக்கு எதிராக பாட்டாளி வர்க்கத்திற்கும், அதன் இலட்சியங்களுக்கும் எதிராக சுரண்டும் வர்க்க அமைப்பைக் கட்டிக் காப்பதும் வர்க்கப் போராட்டத்திற்கு முன்பாக தேசிய இனப் பிரச்சினையை முன்வைப்பதும் அதன் நோக்கம். இதனால் முதலாளித்துவ அரசியல், பொருளாதார அமைப்பு கட்டிக் காக்கப்படும்; சமுதாய முன்னேற்றத்திற்கான பாட்டாளி வர்க்க சக்திகள் தடை செய்யப்படும்.

இதற்கு மாறாக பாட்டாளி வர்க்க கண்ணோட்டம் என்பது இன ஒடுக்கு முறையை எதிர்த்த போராட்டத்தை, அதன் ஜனநாயகத் தன்மையை தீவிரமாக, உறுதியாக ஆதரிக்கும். அனைத்து தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கும், சமத்துவத்திற்கும் போராடும். தமிழ் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்கும். அதன் மீதான அடக்கு முறையை எதிர்த்துப் போராடும். அதே நேரத்தில் வர்க்கப் போராட்டத்தின் நலன்களுக்கு உட்படுத்தியே தேசிய இனப்பிரச்சினையை அணுகும். குறுகிய முதலாளிய தேசிய வாதத்திற்குப் பதிலாக பரந்த பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்தை உயர்த்திப்பிடிக்கும். தேசிய இன ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடுவதுடன் கூடவே எல்லா ஒடுக்கு முறைகளுக்கும் எதிராக முதலாளிகளின் ஆதிக்கம், தில்லு முல்லுகளுக்கெதிராக சிங்கள—தமிழ் உழைக்கும் மக்களின் ஒற்றுமையை உயர்த்திப் பிடிக்கும். இன ஒடுக்கு முறையை எதிர்த்த போராட்டத்தில் சிங்கள இன வெறி பாசிஸ அரசுக்கு எதிராகக் குறிப்பான திட்டம் ஒன்று வைத்துச் செயல்படும். இது இன வெறி அரசை வீழ்த்தி இன ஒடுக்கு முறையில் இருந்து தமிழினத்திற்கு விடுதலை-தமிழ் தேசிய இனத்திற்கு பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுய நிர்ணய உரிமையையும், மலையகத் தமிழர்களின் உரிமைக்கு பாதுகாப்பும் தருவதுடன் இன ஒடுக்கு முறைக்கு எதிரான ஜனநாயக சக்திகளின் அரசு ஒன்றை ஏற்படுத்தும்.

இந்த அரசு பாட்டாளிவர்க்க அரசு வடிவத்தை (சோவியத் வடிவத்தை) அடிப்படையாகக் கொண்டிருப்பதால் சமுதாய வளர்ச்சிக்குத் தடையான சக்திகளை வீழ்த்தி ஜன

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாயகம், சோசலிசம் மற்றும் கம்யூனிஸம் நோக்கி முன்னேறுவதற்கான கூறுகளைத் தன்னுள் கொண்டிருக்கும். பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்துடனேயே இலங்கைத் தமிழ் தேசிய இனம் இன ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராடுவதை நாம் உறுதியுடன் ஆதரிக்கிறோம். பிரிந்து போகும் உரிமை உள்ளிட்ட சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்கிறோம். ஆனால் தனிநாட்டுக் கோரிக்கையை பரிசீலிக்கின்றோம்.

முதலாவதாக இலங்கை அரசு ஒரு ஏகாதிபத்திய அரசோ, காலனி அல்லது நவீன காலனி அரசோ அல்ல. எனவேதான் தமிழ் ஈழ தனிநாட்டுக் கோரிக்கை சிங்களப் பெருந்தேசிய இன ஒடுக்கு முறையை எதிர்ப்பதாக இருக்கிறதேயன்றி ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதாகவோ அன்றி பலவீனப்படுத்துவதாகவோ இல்லை. எனவே தமிழ்ஈழ தனிநாட்டுக் கோரிக்கையை நாம் ஆதரிக்க முடியாது உள்ளது.

இரண்டாவதாக தமிழ் ஈழத் தனிநாட்டுக் கோரிக்கையை வைப்பவர்களில் ஒரு பிரிவினர் இப்போது இருக்கும் முதலாளித்துவ அரசியல், பொருளாதார அமைப்பைக் கொண்ட தமிழ் ஈழத்தையே தமது நோக்கமாகக் கொண்டுள்ளனர். ஆனால் முதலாளித்துவ அரசியல், பொருளாதார அமைப்பிற்கான திட்டத்தின் அடிம்படையில் இனவெறி அரசுக்கு எதிராகப் பெரும்பான்மையான மக்களை திரட்ட முடியாது. எனவே இனவாத அடிப்படையில் தமிழ் இன மக்களை அணி திரட்டுகின்றனர். இதுதமிழ்—சிங்கள உழைக்கும் மக்களின் நலன்களுக்கு கேடு விளைவிப்பதாகவும், உழைக்கும் மக்களின் வர்க்கப் போராட்டத்தை இனவாதச் சேற்றுக்குள் திசை திருப்பி விடுவதாகவும் மட்டுமே உள்ளது. மேலும் முதலாளித்துவ அரசியல், பொருளாதார அமைப்பைக் கொண்டமையும் தமிழ் ஈழம் இப்போதிருக்கும் அரசியல், பொருளாதார அமைப்பைவிட எந்த விதத்திலும் முற்போக்கானது அல்ல.

மூன்றாவதாக தமிழ் ஈழம் கோருபவர்களில் மற்றோர் பிரிவினர் சோசலிஸ தமிழ்ஈழ அமைப்பையும், தமிழ்-சிங்கள உழைக்கும் மக்களின் ஒற்றுமையையும் தமது நோக்கமாகக் கூறுகின்றனர். சோசலிஸத்தை நோக்கி முன்னேற ஆதிக்கத்திலிருக்கும் இனவெறி அரசை வீழ்த்த வேண்டும். அந்த இடத்தில் முதலாளித்துவ அரசமைப்புக்குப் பதில் ஒரு ஜனநாயக அரசமைப்பை (இனவெறி அரசுக்கு எதிரான



இன ஒடுக்கு முறையை எதிர்க்கும் அனைத்து ஜனநாயக சக்திகளின் சோவியத் வடிவிலான ஒரு அரசமைப்பை) ஏற்படுத்த வேண்டும். இனவெறி அரசு தமிழ் தேசிய இனத்திற்குஎதிராக ஒடுக்கு முறை அரசாக இருக்கும் அதே வேளையில் இரு தேசிய இன உழைக்கும் மக்கள் மீதும் கொடூரமான ஒடுக்கு முறை செலுத்துவதாகவும் இருக்கின்றது. எனவே இரண்டு தேசிய இன உழைக்கும் மக்களுக்கும் பொது எதிரியாக இருக்கும் இனவெறி பாசிஸ அரசை, சோசலிஸத்தை நோக்கி முன்னேறுவதை நோக்கமாகக் கொண்டிருக்கும் ஒரு திட்டத்தின் கீழ் தூக்கி எறிவது தமிழ் தேசிய இன மக்களுக்கு இன ஒடுக்குமுறையில் இருந்து விடுதலையையும், சமத்துவத்தையும் தரும் என்பதுடன் அனைத்து உழைக்கும் மக்களின் நல் வாழ்வுக்கும் உத்தரவாதம் தரும்.

எனவே இத்திட்டத்தின் கீழ் இனவெறி அரசை எதிர்த்து இரு தேசிய இனங்களின் மக்களையும் ஓரணியில் திரட்ட முடியும். அவ்வாறு திரட்டுவதன் மூலம் மட்டுமே சோசலிஸத்தை நோக்கி முன்னேற முடியும். ஆனால் சோசலிஸ தமிழ் ஈழம் பற்றிப் பேசுகின்ற பிரிவினர் இனவெறி அரசை வீழ்த்துவதற்கு சிங்கள—தமிழ் உழைக்கும் மக்களை ஓரணியில் திரட்டுவதற்கான திட்டம் எதையும் வைத்திருக்கவில்லை. மாறாக தமிழ் இனமக்களை மட்டும் அணி திரட்டி இனவெறி அரசை தூக்கியெறியப்போவதாகவும் கூறுகின்றனர்.

அவ்வாறு கூறுவதன் மூலம் இனவெறி அரசை எதிர்த்த மிகப்பெரிய சக்தியான சிங்கள உழைக்கும் மக்களையும், தமிழ் இன உழைக்கும் மக்களையும் ஓரணியில் திரட்ட வேண்டிய அவசியத்தையும் அதற்காக உணர்வு பூர்வமாகத் திட்டமிட்டு அமைப்பு ரீதியில் ஆற்ற வேண்டிய பணியையும் இவர்கள் நிராகரிக்கின்றார்கள். இதன் மூலம் சிங்கள உழைக்கும் மக்களை சிங்கள இனவெறி அரசின் பின் விட்டு வைக்கிறார்கள். இது தமிழ் இன உழைக்கும் மக்களின் போராட்டத்தை பலவீனப்படுத்துவதுடன் இனவெறி அரசை பலப் படுத்துவதுமாகும். சிங்கள—தமிழ் மக்களின் ஒற்றுமை பற்றி இவர்கள் பேசினாலும் அதற்கானத் திட்டம் எதுவும் இவர்களிடத்தில் இல்லை. எனவே சோசலிஸ தமிழ் ஈழமென்பது வெறும் கற்பனை வாதமே! இந்நிலையில் இது பாட்டாளிவர்க்கத்தின் ஆதரவைப் பெற முடியாது. தமிழ் இன ஒடுக்கு முறையில் இருந்து விடுபடவும் ஒரு சோசலிஸ அமைப்பைக் காணவும்

www.tamilarangam.net



விரும்பும் இவர்கள் விருப்பம் உண்மையில் செயல்பூர்வமாக்கப்பட வேண்டுமானால் தமிழ்—சிங்கள உழைக்கும் மக்களின் ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டு இன வெறி அரசை எதிர்க்கும் அனைத்து ஜனநாயக சக்திகளின் சோவியத் வடிவ அரசமைப்பை நிறுவுவதற்கான ஒரு குறிப்பான திட்டத்தை முன் வைத்துச் செயல்பட வேண்டும்.

அவ்வாறு அன்றி சோசலிஸ தமிழீழக் கோரிக்கையை முன்வைப்பது குறுகிய முதலாளிய தேசிய வாதமாகவும், சோசலிஸ நோக்கத்திற்கு எதிரானதாகவும் இருக்கும்.

தேசிய இன ஒடுக்குமுறையை எதிர்த்து தமிழ் தேசிய இனம் நடத்தும் போராட்டத்தை உணர்வு பெற்றபாட்டாளி வர்க்கம் உறுதியுடன் ஆதரிக்கும் அதே வேளையில் இன ஒடுக்கு முறையில் இருந்து மட்டுமின்றி, அனைத்து ஒடுக்கு முறைகளிலிருந்தும் விடுதலை பெறுவதற்காக தமிழ்—சிங்கள உழைக்கும் மக்களின் ஒற்றுமையைப் பேணிப் போற்ற வேண்டும். இவ்வொற்றுமைக்கு அடிப்படையாகச் சிங்கள உழைக்கும் மக்கள் தமிழ் தேசிய இனத்தின் பிரிந்து போகும் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும். தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறையை எதிர்த்துத் தமிழ் மக்களுடன் இணைந்து போராட வேண்டும்.

சிங்கள இனவெறி அரசு தமிழ் மக்களின் உரிமையைப் பறிப்பது மட்டுமல்ல சிங்கள உழைக்கும் மக்களையும் அடக்கி, ஒடுக்குகிறது என்பதை உணர்ந்து இலங்கை இன வெறி அரசை எதிர்த்து சிங்கள உழைக்கும் மக்கள் நடத்தும் போராட்டங்களையும் தமிழ் தேசிய இன மக்கள் ஆதரிக்க வேண்டும். இரு தேசிய இன மக்களுக்கும் பொது எதிரியாக இருக்கும் ஆளும் வர்க்கத்தையும், அரசு எந்திரத்தையும், தூக்கி எறிவதில் இரு தேசிய இன உழைக்கும் மக்களின் ஐக்கியம் அவசியமாகும். எனவே இன ஒடுக்கு முறை மற்றும் எல்லாத் தேசிய வாதச் சலுகைகளுக்கும் எதிராக, எல்லா ஒடுக்கு முறைகளுக்கும் எதிராக இரு தேசிய இன உழைக்கும் மக்களிடையே உணர்வு பெற்ற பாட்டாளி வர்க்கச் சக்திகள் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும். இத்திட்டம் இன வெறியை ஏவி விடும் இனவெறி அரசை வீழ்த்தி விட்டு இரு இனங்களுக்கும் சமத்துவம், சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை அங்கீகரிக்கின்றது. மலையக தமிழர்களின் உரிமைகளுக்கு பாதுகாப்பளிக்கின்ற இனவெறி பாசிஸத்திற்கு எதிராக



நிற்கும் அனைத்து மக்களுடைய ஒரு ஜனநாயக அமைப்பை (சோவியத் வடிவ ஆட்சிமுறை மட்டுமே இத்தகைய ஜனநாயகத்தை உத்தரவாதப்படுத்தும்.) நிறுவுவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும்.

அத்தகைய திட்டம் மட்டுமே இன ஒடுக்கு முறையில் இருந்து தமிழ் இனத்தைக் காக்கும் என்பது மட்டுமின்றி தேசிய இனப் பிரச்சினையை கூர்மழுங்கச் செய்து அமைதியையும், சமத்துவத்தையும் ஏற்படுத்தும் என்பதுடன் ஏகாதிபத்தியங்களுக்கும், ஆக்கிரமிப்பாளர்களுக்கும் இலங்கை இரையாவதையும் தடுக்கும். உழைக்கும் மக்களின் ஒற்றுமையை வளர்க்கும். முதலாளி வர்க்கத்தையும் அதன் அனைத்து தில்லு முல்லுகளையும் முறியடித்து—எதிர்காலத்தில் சோசலிஸத்தையும், கம்யூனிஸத்தையும் நோக்கி முன்னேற வழிவகுக்கும்.

## தமிழ் ஈழக் கோரிக்கையை நியாயப்படுத்த முன் வைக்கப்படும் வாதங்கள்

தமிழ் ஈழமெனும் தனிநாட்டுக் கோரிக்கையை முன் வைத்திருக்கும் அமைப்புக்கள் இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமாக நாம் முன் வைத்திருக்கும் கருத்துக்களை நடைமுறைச் சாத்தியமற்ற வரட்டுச் சூத்திர வாதமென்றும் தங்கள் தமிழ் ஈழ கோரிக்கை பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டின் பாற்பட்டதே என்றும் கூற முற்படுகின்றன. இவர்கள் தங்கள் தமிழ் ஈழத் தனி நாட்டுக் கோரிக்கையை பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டின் பாற்பட்டதே என்பதற்கு வைக்கும் வாதங்கள் பின்வருமாறு :—

1. இன்றைய நிலையில் ஒடுக்கும் சிங்கள இனத்திலும், ஒடுக்கப்பட்ட தமிழ் இனத்திலும் உள்ள உழைக்கும் மக்களிடையிலான ஒன்றிணைப்பிற்கான சாத்தியப்பாடு அறவே அற்றுப் போயுள்ளது. ஒடுக்கும் தேசியஇனத்தின் உழைக்கும் மக்கள் புரட்சிகர குணாம்சம் மழுங்கி தேசிய வெறியில் மூழ்கிப்போய்க் கொண்டிருக்கின்றனர்.

2. சிங்கள உழைக்கும் மக்கள் தம்முடன் ஒன்று சேரும் வரை தமிழ் மக்கள் பொறுத்திருப்பது என்பது தமது இனத்தை பூரணமாக அழிய அனுமதிப்பது போன்றதாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



3. சிங்கள—தமிழ் உழைக்கும் மக்களின் ஒன்றிணைப்பை குருட்டாம் போக்கில் நிராகரிக்கவில்லை. கடந்த நாலு சகாப்தங்களுக்கும் மேலாக இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4. இன்றைய இலங்கை அரசு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நவ காலனியாய் உள்ளது. எனவே தமிழ் ஈழ தனிநாட்டுக்கான போராட்டம் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமாகும். தமிழ் ஈழதனிநாட்டில் எந்த ஏகாதிபத்தியத்திற்கும் இடம் தரப்படமாட்டாது.

5. தமிழ் ஈழ தனிநாடு ஒரு முதலாளிய சமுதாய அமைப்பைக் கொண்டதாக இருக்காது. அது ஒரு மக்கள ஜனநாயக் குடியரசாகவும் பின்னர் ஒரு சோசலிஸக் குடியரசாகவும் அமையும்.

6. தமழ் ஈழத் தனிநாட்டுக்கான போராட்டம் இலங்கை அரசுக்கும், இராணுவத்துக்கும் எதிரானதேயன்றி சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல. சிங்கள மக்கள் எம் சகோதரர்கள்.

7. சிங்கள மக்களை தேசிய வெறியில் இருந்துமீட்டெடுக்கின்ற செயலை தமிழ் ஈழ விடுதலைப் போராட்டமே செய்யும்.

8. சிங்கள— தமிழ் உழைக்கும் மக்களின் ஒன்றான திட்டமே தமிழ் ஈழப் போராட்டம்.

இவை ஒவ்வொன்றையும் பரிசீலிப்போமானால் முதலாவதாக :—

## 1. சிங்கள— தமிழ் உழைக்கும் மக்களின் ஒற்றுமை சாத்தியமற்றதா?

சிங்கள மக்கள் இனவெறியில் மூழ்கியுள்ளனர். அவர்களுடன் ஒன்றிணைப்பு சாத்தியப்பாடே இல்லையென்று கூறுகின்றனர். இவர்கள் இந்த முடிவுக்கு எவ்வாறு வந்தனர்? தமிழ் ஈழ தனிநாட்டுக் கோரிக்கைக்கு சிங்கள மக்கள் ஆதரவு தரவில்லை. அதற்காக அவர்களும் போராட முன் வரவில்லை என்பதில் இருந்து இந்த முடிவுக்கு வந்தார்களா? தமிழ் ஈழ தனிநாட்டுக் கோரிக்கைக்கு சிங்கள



மக்கள் ஆதரவளிக்க வேண்டுமெனக் கருதுவது தர்க்க நியாயமற்ற எதிர்பார்ப்பாகவே இருக்க முடியும்.

ஏனெனில் இக் கோரிக்கை 1. நாட்டை துண்டு போடுவதாக இருக்கின்றது. 2. இலங்கை பாசிஸ்ட் அரசால் ஒடுக்கப்படும் சிங்கள மக்கள் பற்றி எவ்வித அக்கறையும் கொண்டதாக இல்லை. இலங்கை இனவெறி அரசிடமிருந்து தமிழ் மக்களை மட்டும் விடுவிக்கும் நோக்கம் கொண்டதாகவே இருக்கிறதேயன்றி சிங்கள மக்களை அந்த அரசின் அடக்கு முறையில் இருந்து விடுவிப்பதாக இல்லை. சாராம்சத்தில் தமிழ் ஈழக் கோரிக்கை இலங்கை அரசை ஒழிக்கும் திட்டமாக இல்லை. மாறாக இனவெறி அரசுடன் சிங்கள மக்களுக்கெதிராக ஒரு உடன்பாட்டுக்கு வருவதாகவே உள்ளது. இவ்வாறு இருக்கும் போது இக்கோரிக்கைக்கு ஆதரவாக சிங்கள மக்கள் தம்முடன் இணைந்து போராடவர்வேண்டுமென் இவர்கள் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

சிங்கள மக்கள் தமிழ் ஈழக் கோரிக்கைக்கு ஆதரவாகப் போராடவில்லை என்பதால் சிங்கள மக்கள் அனைவரும் இனவெறியர்கள் ஆகிவிட்டார்கள் என்பது தவறானதாகும். தொழிலாளர்கள் பல சமயங்களில் தமது கோரிக்கைகளுக்காகப் போராடி ஒடுக்கு முறைக்குள்ளாகும்போது விவசாயிகள் போராட்டத்தில் இறங்குவதில்லை (ஒரே இனத்திலேயே என்பதை பரவலாகக் காணமுடியும். இதற்குக் காரணம் விவாாயிகள் தொழிலாளர்களுக்கு எதிராக மாறி விட்டார்கள் என்பதால் அல்ல. இருவருக்கும் பொது எதிரியான அரசை எதிர்த்தே தொழிலாளர்கள் போராடினாலும் இருவருக்கும் பொதுவான கோரிக்கையின் அடிப்படையில் போராடாதபோது அவர்கள் ஒருவருக்கொருவர் ஆதரவு அளிப்பார்களென எதிர்பார்க்க முடியாது என்பதேயாகும். அதேபோல் சிங்கள மக்களுக்கும் சேர்த்து முன் வைக்கப்படாத தமிழ் ஈழக் கோரிக்கைக்கு எப்படி சிங்கள மக்கள் ஆதரவளிப்பார்கள்?

உண்மை என்னவெனில் தமிழ்மக்கள் மீதான ஒடுக்குமுறையில் ஈடுபடுகிறவர்கள் இலங்கை அரசும், அதன் ஏவல்நாய் இராணுவமும், சில சிங்கள இனவெறியர்களுமேயன்றி சிங்களப் பொது மக்கள் அல்ல என்பதையும் தமிழ் ஈழக் கோரிக்கையை முன்வைப்பவர்கள் கூட ஏற்றுக் கொள்ளுவர். பரந்துபட்ட சிங்கள மக்கள் தமிழ் மக்களுக்கு எதிரான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தாக்குதலில் ஈடுபடுவதில்லை. சிங்கள மக்களனைவரும் இனவெறியர்களாகி தமிழ் மக்களுக்கு எதிரான தாக்குதலில் ஈடுபடுவார்களேயானால் இலங்கையில் ஒருதமிழர்கூட மிஞ்ச முடியாது. மாறாக தம்உயிரை பணயம் வைத்து தமிழ் மக்களை காப்பாற்றிய சிங்கள மக்கள் ஏராளம். மேலும் சிங்கள மக்களிடையே தமிழ் மக்களின் சுயநிர்ணயஉரிமையை அங்கீகரிக்க வேண்டுமெனக் கோரும் அமைப்புக்கள் ஏராளமாய் இருக்கின்றன. பல்வேறு தொழிற்சங்கங்களின் கூட்டமைப்புகள் தமிழர்களுக்கெதிரான வன்முறையை மட்டுமல்ல ஒடுக்கு முறையையும் கூட கண்டித்திருக்கின்றன.

எனவே சிங்கள மக்களனைவரும் இனவெறிக்குட்பட்டுள்ளனர் என்பது தவறான கூற்றாகும். அத்தோடு இவர்களின் தமிழ் ஈழத் தனி நாட்டுக் கோரிக்கை இலங்கை அரசு சிங்கள மக்களிடையே மேலும் இனவாதத்தை தூண்டிவிடவும் தமிழ்மக்கள் மீது அவநம்பிக்கையையும், பகைமையையும் தூண்டிவிடவும்—இதன் மூலம் தமிழ்—சிங்கள உழைக்கும் மக்களின் அய்க்கியம் சாத்தியமற்றதாக செய்யவும்-மட்டுமே உதவும். அத்துடன் சிங்கள மக்களின் விடுதலைக்கும் சேர்ந்து ஒரு திட்டத்தை முன் வைக்காமல் தமிழ்—சிங்கள மக்களின் அய்க்கியம் பற்றிப் பேசும் இவர்கள் அரசியல் ஞானம் நமக்கு சந்தேகத்தைக் கொடுக்கின்றது.

## 2 அய்க்கியத்திற்கு முன் அழிவு என்பது புனை கதையே:-

இரண்டாவதாக சிங்கள மக்கள் தம்முடன் அய்க்கியப்படும் வரை பொறுத்திருப்பது தமிழ் மக்களின் முழுமையான அழிவுக்கு அனுமதிப்பது போன்றதாகும் என்கின்றனர். இனவெறி பாசிஸ அரசை சிங்கள—தமிழ் உழைக்கும் மக்கள் ஒன்றுபட்டு தூக்கி எறிந்துவிட்டு ஒரு மக்கள் ஜனநாயகக் குடியரசை இலங்கையில் நிறுவ வேண்டும். அது மட்டுமே தமிழ் மக்களுக்கு இன ஒடுக்கு முறையில் இருந்தும், வர்க்க ஒடுக்கு முறையில் இருந்தும், விடுதலை தரும், என நாம் சுட்டிக் காட்டும்போது தமீழ்—சிங்கள உழைக்கும் மக்களின் அய்க்கியம் சாதிக்கப்படும் வரை பாசிஸ இனவெறி அரசுக்கு எதிரான போராட்டத்தை கைவிட வேண்டுமென எவ்விடத்திலும் கூறவில்லை. மாறாக இலங்கை இன வெறி அரசின் ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டத்தை அந்த அரசை தூக்கி எறிந்து விட்டு இலங்கையில் ஒரு மக்கள் ஜனநாயகக்



குடியரசு அமைக்கும் திட்டத்தின் அடிப்படையில் நடத்த வேண்டுமென்றே நாம் சுட்டிக் காட்டுகின்றோம்.

இத்தகைய திட்டம் சிங்கள-தமிழ் உழைக்கும் மக்களின் பொது எதிரியைத் தூக்கி எறிந்துவிட்டு இருவருக்கும் பொதுவான ஜனநாயகக் குடியரசை தருவது என்பதால் தமிழ்-சிங்கள மக்கள் இப்போராட்டத்தில் அய்க்கியப்படுவது சாத்தியம் என்றே நாம் கருதுகின்றோம். எனவே இத்தகைய திட்டத்தை வைத்து அய்க்கியத்தை ஏற்படுத்துவதை விடுத்து தமிழ்-சிங்கள உழைக்கும் மக்கள் அய்க்கியப் படுமுன் தமிழ் இனமே முற்றாக ஒடுக்கு முறையால் அழிந்துவிடுமெனக் கூறுவது வர்க்கப் போராட்டப்பாதையை திசைதிருப்புவதற்கான தந்திரமன்றி வேறல்ல.

## 3. அய்க்கியத்திக்கான முயற்சி இதுவரை இருந்ததில்லை:-

மூன்றாவதாக தமிழ்-சிங்கள மக்களின் ஒன்றிணைப்பை குருட்டாம் போக்கில் நிராகரிக்க வில்லையென்றும், கடந்த நாலு சகாப்தமாக அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் கூறுகிறார்கள். இலங்கை இனவெறி ஆளும் வர்க்கங்களையும், அரசமைப்பையும் தூக்கியெறிந்துவிட்டு ஒருமக்கள் ஜனநாயகக் குடியரசு அமைக்கும் நோக்கத்திற்காகஎப்போதுமே ஒரு திட்டம் வைத்து இவர்கள் செயல்படவில்லை. அவ்வாறு இருக்க நான்கு சகாப்தங்களாக தமிழ்-சிங்கள மக்கள் ஒன்றிணைப்புக்கு முயன்றதாக இவர்கள் கூறுவது தவறான வாதமாகும். ஒரு வேளை இலங்கையின் இன்றைய அரசியல், பொருளாதார அமைப்பை அங்கீகரித்துக் கொண்டு பாராளுமன்றத்தில் பங்கெடுத்துக் கொண்டிருந்த— இலங்கை அரசின் தமிழின ஒடுக்கு முறையை எதிர்த்து சாத்வீகப் போராட்டங்களை நடத்திக்கொண்டிருந்த — கடந்த கால செயல்பாடுகளை குறிப்பிடுவார்களாயின் அது தமிழ்-சிங்களமக்களை அய்க்கியப் படுத்துவதற்கான முயற்சி அல்ல. மாறாக இலங்கை ஆளும் வர்கங்களுடன் அதிகாரத்தைப் பங்கிட்டுக் கொள்வதற்கான தமிழ் இன முதலாளிகளின் முயற்சியாகும் என்பதை நாம் சுட்டிக் காட்ட வேண்டும். இன்றைய சமுதாய அமைப்புதான் இலங்கை ஆளும் வர்க்கங்கள் இனவெறியைத் தூண்டிவிட்டு தமிழ்— சிங்கள மக்களை பிளவு படுத்தவும், மோதவிடவும் காரணமாக இருக்கின்றபோது அந்த சமுதாய அமைப்பை ஏற்று செயல்பட்ட செயல்பாடுகளை தமிழ்-சிங்களமக்களின் அய்க்கியத்திற்கான செயல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாடுகள் எனக் கூறுவது முரண்பாடானதாகும், இன்று மட்டு மல்ல என்றுமே இவர்கள் இலங்கை மக்களின் அய்க்கியத்திற்கு வழி வகுக்கக் கூடியதும், இன ஒடுக்கு முறைக்கும், சுரண்டும் வர்க்க ஒடுக்கு முறைக்கும் முடிவு கட்டக் கூடியதுமான ஒரு மக்கள் ஜனநாயகத் திட்டத்தின் அடிப்படையில் செயல் பட்டது இல்லை என்பதே எமது விமர்சனமாகும்.

## 4. ஏகாதிபத்திய எதிர்ப்பு அல்ல ஆதரவே :-

நான்காவதாக இலங்கை அரசு அமெரிக்க ஏகாதிபத்தியத் தின் நவ காலனிய அரசாக உள்ளது. எனவே இன்றைய இன வெறி அரசை எதிர்த்த போராட்டம் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமும் ஆகும். மேலும் உருவாகும் தமிழ் ஈழத்தில் எவ்வித ஏகாதிபத்தியங்களுக்கும் இடமளிக்கப் படாது என்கிறார்கள். இலங்கை அரசு ஒரு அமெரிக்க நவகாலனிய அரசு என்றால், இவர்கள் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் உண்மையானால் இலங்கை முழுவதிலும் அல்லவா இருந்து அமெரிக்க ஏகாதிபத்தியத்தை விரட்ட வேண்டும். மாறாக ஒரு பகுதியில் இருந்து விரட்டி விட்டு மறு பகுதியில் தொடர்ந்து அனுபவிக்க அனுமதிப்பது போன்றல்லவா இவர்களுடைய தமிழ் ஈழப் போராட்டமும், ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வும் இருக்கின்றது.

அத்துடன் எந்த ஏகாதிபத்தியத்தையும் தமிழ்ஈழ மண்ணில் அனுமதிக்க மாட்டோம் எனக் கூறும் இவர்கள் இரஷ்ய சமூக ஏகாதிபத்தியம் பற்றி எதுவும் கூற மறுக்கின்ற னர். மேலும் சில தமிழ் ஈழம் கோரும் அமைப்புக்கள் பகிரங்க மாகவே சமூக ஏகாதிபத்தியத்தை ஆதரிக்கின்றன என்பது இதை மேலும் உறுதிப்படுத்துகின்றது. எனவே தமிழ் ஈழக் கோரிக்கை ஏகாதிபத்தியத்தை எதிர்த்த போராட்டம் என்பதும் இவர்களுடைய ஏகாதிபத்திய எதிர்ப்பும் ஏற்றுக் கொள்ள முடியாதவையாகும்.

## 5. மக்கள் ஜனநாயகக் குடியரசு அல்ல முதலாளிய அரசையே முன்வைக்கிறார்கள் :-

ஐந்தாவதாக தமிழ் ஈழம் ஒரு ஜனநாயக் குடியரசாகவும் பின்னர் ஒரு சோசலிசக் குடியரசாகவும் அமையும் என்கின்ற னர். இவர்களைப் பொறுத்தவரை தமிழ் ஈழத்தை ஜெயவர்த்தனா அரசை எதிர்த்த போராட்டத்தில் பெற



விரும்புகின்றனரேயன்றி ஜெயவர்த்தனா அரசின் அழிவில் அல்ல இவ்வகையில் சிங்கள மக்களுக்கு எதிராக ஜெயவர்த்தனா அரசுடன் ஓர் உடன்பாட்டுக்கு வரவே இவர்கள் விரும்புகிறார்கள். இவர்களுக்கு இலங்கையில் உள்ள தமது சகோதர சிங்கள மக்களைப் பற்றி அக்கறை யில்லை. தமது இனத்தைப் பற்றி மட்டுமே அக்கறை இது அப்பட்டமான பூர்ஷ்வா தேசிய வாதமன்றி வேறல்ல.

## 6. சிங்கள மக்களையும் சகோதரர்களாக பார்க்கிறார் களா?

ஆறாவதாக இலங்கை ஆளும் வர்க்கமும், அதன் ஏவல் நாய் இராணுவமும் தான் தனது எதிரிகள் என்றும் சிங்கள உழைக்கும் மக்கள் தமது சகோதரர்கள் என்றும் இவர்கள் கூறுகின்றனர். உண்மையில் இவர்கள் சிங்கள மக்களை சகோதரர்களாக கருதுகிறவர்களாயின் ஏன் இவர்களிடம் இருந்து பிரிந்து தனிநாடு கோருகின்றனர்? இருவருக்கும் பொது எதிரியாய் இருக்கும் பாசிஸ இனவெறி அரசை தூக்கி யெறிந்துவிட்டு, இருவருக்கும் ஜனநாயகமும், சமத்துவமும் தரக்கூடிய ஒரு மக்கள் ஜனநாயகக் குடியரசுக்காகப் போரா டாமல், இலங்கைஅரசுடன் உடன்பாட்டுக்கு வரும் கோரிக்கை யான தமிழ் ஈழ நாட்டுக்காக ஏன் போராடவேண்டும்? ஒரே அரசு எல்லைக்குள் இருந்து கொண்டு அவர்களிடம் இருந்து பிரிந்து செல்வதற்கும், அவர்களுடைய எதிரியுடன் உடன் பாட்டுக்கு வருவதற்குமான கோரிக்கையை முன் வைத்துப் போராடிக்கொண்டே சிங்கள மக்கள் எமது சகோதரர்கள் என்று கூறும் இவர்கள் கூற்று வெறும் வாய்ச் சொல்லன்றி வேறு எதுவாக இருக்க முடியும்?

## 7. இனவாதம் இனவெறித் தீர்வாகுமா?

ஏழாவதாக சிங்கள மக்களை இனவெறியில் இருந்து மீட்டெடுக்கும் செயலை தமிழீழ விடுதலைப் போராட்டமே செய்யும் என்கின்றனர். உண்மை என்னவெனில் சிங்கள மக்கள் அனைவரும் இன வெறியர்களாயிருந்திருப்பின் ஒரு தமிழர்கூட இலங்கையில் உயிர்வாழ முடியாது என்பதையும் தமிழ் மக்கள் இனவெறித்தாக்குதலுக்கு உள்ளாகும் போதெல்லாம் அவர்களுக்கு உதவியும், பாதுகாப்பும் அளித்த சிங்கள மக்களைப் பற்றியும் ஏராளமான செய்திகளை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாரும் மறுக்கவில்லை என்பதையும் இலங்கை அரசின் ஒடுக்கு முறைக்கு எதிராக சிங்கள மக்கள் போராடி கடும் ஒடுக்கு முறையைச் சந்தித்து வருகிறார்கள் என்பதையும் சிங்கள மக்களிடையேயுள்ள தொழிற்சங்கக் கூட்டமைப்புகள் தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறையைக் கண்டித்திருக்கின்றன என்பதையும் முன்னரே சுட்டிக் காட்டினோம்.

எனவே சிங்கள மக்கள் அனைவரும் இனவெறியில் மூழ்கியிருப்பதாக சித்தரிப்பது உண்மைக்கு புறம்பானது. இது ஒரு புறம் இருக்க தமிழ் ஈழப் போராட்டம் சிங்கள மக்களிடையே தமிழ் மக்கள் மீது அவநம்பிக்கையையும் பகையையும் ஊட்ட ஆளும் வர்க்கங்களால் வெற்றிகரமாக பயன்படுத்தப்படும்-பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இது இயல்பானதே. எனவே தமிழ் ஈழப் போராட்டம் சிங்கள மக்களை இனவெறியில் இருந்து மீட்பதற்கு அல்ல. மாறாக மேலும் அவர்களிடையே இனவெறியைப் பரப்புவதற்கு மட்டுமே பயன்படும் என்பதை இவர்கள் உணர மறுப்பதேன்?

## 8. பிரிவினைக் கோரிக்கை பொதுவான கோரிக்கையா?

எட்டாவதாக சிங்கள-தமிழ் மக்களின் ஒன்றான திட்டமே தமிழ் ஈழப் போராட்டம் என்கிறார்கள். தமிழ் ஈழப் போராட்டம் சிங்கள இனவெறி அரசுடன் ஒரு உடன்பாட்டுக்கு வருவதற்கான போராட்டம். இது சிங்கள—தமிழ் உழைக்கும் மக்களுக்கான பொதுவான திட்டமாக எவ்வாறு இருக்க முடியும்? தமிழ் பூர்ஷ்வா தேசியவாதக் கோரிக்கையே தமிழ்—சிங்கள உழைக்கும் மக்களின் பொதுவான திட்டம் எனக் கூறுவது பூர்ஷ்வா தேசியவாத நலனை வெளிப்படுத்துகிறதேயன்றி தமிழ் - சிங்கள மக்களின் பொதுநலனை அன்று

மேலும் தமிழ் ஈழ தனி நாட்டுக்காகப் போராடும் பெரும்பாலான அமைப்புக்கள் இந்திய அரசை நம்பிக்கை நட்சத்திரமாகக் காட்டுகின்றனர். எனவே தமிழ் மக்களின் விடுதலைக்கு இந்திய அரசு உண்மையிலேயே நம்பிக்கை நட்சத்திரமா? என்பதை ஆராய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.



## இந்திய ஆட்சியாளர்களின் நோக்கம் மேலாதிக்கமே

இந்திய ஆட்சியாளர்கள் சென்ற 40 ஆண்டுகளாக இந்திய தேசிய இனங்களின் மொழியையும், கலாச்சாரத்தையும் நசுக்கி வருகின்றனர். நாகா, மிஜோ, திரிபுரா, மணிப்பூர், பஞ்சாப், அசாம் தேசிய இனங்களின் உரிமைப் போராட்டங்களை இராணுவம், போலீஸ் படைகளைக் கொண்டு இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்து வருகின்றது. உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பறித்து பாஸிசத்தை படிப்படியாக அரங்கேற்றி வருகின்றது. இந்த இந்திய அரசையே தமிழ் ஈழ அமைப்புக்கள் நம்பிக்கை நட்சத்திரமாய்க் காட்டுகின்றன.

இவர்களுடைய நிலை திருடனுக்கு அஞ்சி கொள்ளைக்காரனிடம் அடைக்கலம் புகுந்த கதையை ஒத்து இருக்கிறது. இவர்கள் இந்தியாவில் உள்ள மக்களையும், புரட்சிகர சக்திகளையும் சார்ந்து நிற்காமல் இந்திய பாசிஸ ஆட்சியாளர்களிடம்சரணடைந்தது எமக்குப் பெரும்ஆச்சரியத்தைக் கொடுகின்றது. இவர்களுக்கு இராணுவப் பயிற்சி, ஆயுதங்கள் "என்பவற்றை வழங்கிய இந்திய பாசிஸ அரசு தமிழ் மக்களுக்கு உதவ வேண்டும் என்ற அடிப்படையில் இவற்றைச் செய்யவில்லை என்பதை முதலில் இத் தமிழ் ஈழ அமைப்புக்கள் உணரவேண்டும்.

பாசிஸ்ட் ஜெயவர்த்தனாவை தங்கள் மேலாதிக்கத்தின் கீழ் கொண்டுவர தமிழ் ஈழப் போராளிகளை பகடைக் காய்களாகப் பயன்படுத்த இந்திய பாசிஸ்ட்டுகள் திட்டமிட்டனர். இலங்கையை உடைத்து தமிழ் ஈழம் தனியாகப் பிரிவதை இந்திய ஆட்சியாளர்கள் விரும்பவில்லை. ஏனெனில் அது இந்தியப் பெரு முதலாளிகளின் சுரண்டல் நலனுக்கு எதிரானது. ஒட்டு மொத்த இலங்கையை சுரண்டுவதிலேயே இந்திய முதலாளிகளின் நலன் அடங்கியுள்ளது. மேலும் தமிழ் ஈழப் போராளிகளுக்கு பல உதவிகளைச் செய்த இந்திய அரசு இதுவரை தமிழ் ஈழத்தை அங்கீகரிக்கவில்லை. மாறாக இலங்கை ஒருமைபாட்டையே மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கிழக்கு பாகிஸ்தான் மீது படை எடுத்து வங்காள தேசத்தை உருவாக்கிய இந்திய அரசு இலங்கைமீது படை எடுத்து தமிழ்ஈழம் உருவாக்குவதை ஆதரிக்கவில்லை. இந்திய அரசின் இந்த முரண் பாடான நிலைக்குக் காரணம் என்ன? இந்திய அரசின் இந்நிலைப் பாடுகள் முரண்பாடானவையாக, முரண்பாடானவை போல் தோற்றமளித்தாலும் உண்மையில் முரண்பாடானவை அல்ல. ரஷிய சமூக ஏகாதிபத்தியத்துடன் இராணுவ ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கும் இந்திய அரசு, சமூக ஏகாதிபத்தியத்தின் அனுமதியும், ஆசியும் இன்றி எந்த நாட்டின் மீதும் படை எடுக்க துணியாது. பாகிஸ்தான் அமெரிக்க ஆதரவு நாடாக இருக்க இந்தியாவிற்கு வடகிழக்கே சினத்திற்கு எதிராக ஒரு தளம் தேவைபட்டதால் பாகிஸ்தானை உடைத்து பங்காள தேசாக அமைக்க ரஷ்யா விரும்பியது. ரஷ்ய ஆதரவு, அனுமதியுடன் தனது விஸ்தரிப்பு நோக்கங்களுக்காக இந்திய அரசு ஒரு ஆக்கிரமிப்பு யுத்தத்தின் மூலம் பங்காள தேஷை உருவாக்கியது. வடக்கே அமெரிக்க ஆதரவாளனாய் இருக்கும் எஞ்சிய பாகிஸ்தானை அதன் மேற்குப் பகுதியில் இருக்கும் ஆப்கானிஸ்தானில் தனது இராணுவங்களைக் குவித்து வைத்திருப்பதன் மூலமும் மறு பக்கம் தனது ஆதரவாளனாய் இருக்கும் இந்திய அரசின் மூலமும் ரஷ்ய சமூக ஏகாதிபத்தியம் நெருக்கியடித்து வருகின்றது.

ஆனால் இலங்கையின் நிலைமையோ அவ்வாறு இல்லை. இந்திய அரசு இராணுவத்தை அனுப்பி தமிழ் ஈழத்தை அமைக்குமானால், இந்திய அரசு தமிழ் ஈழம் அமையக் காரணமாய் இருக்குமானால் அதன் விளைவு இலங்கையின் மறுபகுதி அமெரிக்க ஏகாதியத்தியத்தின் இராணுவத் தளமாக மாறுவதாகவே இருக்கும். இந்தியாயின் தென் கோடியில் இந்துமாப் பெருங்கடலில் இத்தகைய அமெரிக்க இராணுவத்தளம் ஒன்று அமைவதை ரஷ்ய சமூக ஏகாதிபத்தியம் விரும்பாது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. எனவேதான் இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டை மதிக்கும் உறுதிமொழிகளை இந்திய அரசு தொடர்ந்து அளித்து வருகின்றது.

எனவே இந்திய அரசு தமிழ் ஈழப் போராளிகளுக்கு உதவுவது தமிழ் ஈழம் உருவாக்குவதற்கு அல்ல. மாறாக இவர்களைப் பயன்படுத்தி முழு இலங்கையும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் 'பிடிக்குள் செல்லவிடாது தனது செல்வாக்கிற்குள் கொண்டு வருவதே. இதுவே இரஷ்ய சமூக ஏகாதிபத்தியத்தினது திட்டமுமாகும். இதை உணர்ந்து கொள்ளாமல் தமது தமிழ் ஈழம் அமைய இந்திய அரசு உதவுமென்று இன்னமும் நம்பிக் கொண்டிருக்கும் தமிழ் ஈழப் போராளிகளை எண்ணும் போது எமக்கு பெரும் கவலையளிக்கின்றது.



தமிழ் ஈழப் போராளிகளின் தமிழ் ஈழக் கோரிக்கையை ஒரு போதும் பாசிஸ்ட் ராஜீவ் ஆதரிக்கவில்லை. தன் கட்டுப்பாட்டுக்குள் வர மறுத்த போராளிகளை நாட்டை விட்டு வெளியேற்றியது. பெங்களூர் வந்த ஜெயவர்த்தனாவை திருப்திப்படுத்தும் நோக்கில் போராளிகளின் ஆயுதங்களை பறிமுதல் செய்தது. அவர்களின் தகவல் தொடர்பு சாதனங்களையும் பறித்து சாதனை செய்தது. எம்.ஜி.ஆர், ராஜீவ் அரசுகள் விடுதலை அமைப்புக்களிடையே மோதல் ஏற்படுத்துவதன் மூலமும் திங்களுக்கு கட்டுப்படாத அமைப்புக்கள் பற்றி அவதூறு செய்வது, கடுமையான நடவடிக்கைகள் எடுப்பது ஆகியவற்றின் மூலமும் அவர்களைப் பெட்டிப் பாம்புகள் ஆக்கி விடுகின்றனர்.

அதே சமயம் மாநில சுயாட்சி வழங்கி தமிழீழ அமைப்புக்களுடன் சமரசம் செய்து கொள்ளும்படி பாசிஸ்ட் ஜெயவர்தனா அரசுக்கு இந்திய அரசு மறைமுக ஆலோசனை வழங்கியுள்ளது. நாகா, மிஜோ, அசாம் மக்களின் வீரம் செறிந்த எழுச்சியையும் பாசிஸ்ட் ராஜீவ் தீர்த்த முறை இலங்கை மக்கள் அறிந்ததுதான். போராட்ட முன்னணித் தலைவர்களை மாநில முதல்மந்திரியாக்கி விடுவது, போராடும் மக்கள் தங்கள் ஆயுதங்களை ஒப்படைத்த பின் அவர்களை அடிமையாக்குவது என்பது இந்திய ஆட்சியாளர்களின் கலை.

இந்தக்குள்ளநரித் தந்திரத்தை பாசிஸ்ட் ஜெயவர்த்தனாவுக்கு பாசிஸ்ட் ராஜீவ் கற்றுக் கொடுத்துள்ளார். எனவே தான் முதன் முதலில் பேச்சு வார்த்தைக்கு இணங்க மறுத்த பாசிஸ்ட் ஜெயவர்த்தனா இப்போது மாநில சுயாட்சி கொடுக்க முன் வந்துள்ளனர். குள்ள நரியிடம் தப்பிய ஆடு வேங்கையிடம் தஞ்சம் புகுந்த கதையானது தமிழ் ஈழப் போராளிகளினதும், தமிழ் ஈழ அமைப்புக்களினதும் நிலைமை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## திராவிட இயக்கங்களின் நிலைப்பாடு :-

இலங்கை அரசின் இனவெறி அடக்கு முறைகளைக்
கண்டித்து தமிழ் நாட்டிலுள்ள தி.மு.க, அ.தி.மு.க அரசியல்
கட்சிகள் எண்ணற்ற ஊர்வலங்களையும், பொதுக் கூட்டங்
களையும், நாடு தழுவிய பந்த்துகளையும் போட்டி போட்டுக்
கொண்டு நடத்தின. இலங்கையில் தமிழ் இனத்தின் மேல்
நடத்தப்பட்ட வன்முறைகளைக் கண்டித்து தமிழ் ஈழம்
அடையும் வரை தி.மு.க கருப்பு பேட்ஜ் அணிவது என்று
தீர்மானித்தது. உடனே அ.தி.மு.க கருப்புச்சட்டைகளையே
போட்டுக் கொள்வதென தீர்மானம் எடுத்தது.

தமிழ் ஈழப் போராளிகளுக்கு ஆதரவு என்று கருணாநிதி
பந்த் அறிவித்தார். உடனே எம். ஜி. ஆர் அரசாங்கமே
பந்த் என்று அறிவித்தார். தமிழ் ஈழப் போராளிகளுக்கு நிதி
வசூல் செய்து கொடுப்பதில் இரண்டு கட்சிகளும் ஒருவருக்
கொருவர் போட்டியாகச் செயல்பட்டனர். தி.மு.க. மற்ற
எதிர்க்கட்சிகளை இணைத்து ஈழப்பிரச்சினையை விரைவில்
தீர்வுக்கு கொண்டு வர தமிழ் ஈழ ஆதரவு அமைப்பு
(TESO) என்ற அமைப்பையே கொடங்கியது. உலக
நாடுகளுக்கு குரல் கொடுத்தது. பேரணிகளை நடத்
தியது, இந்திய இராணுவத்தை அனுப்பி தனி ஈழம்
அமைக்கக் கோரியது. இப்படி முழங்கிய கலைஞர்
கருணாநிதி இன்று மூலைகளில் முடங்கிக் கிடப்பதேன்?
பத்திரிகை நிருபர்கள் கேட்கும் போது நான் என்ன
"சுண்டைக்காய்'' இது பற்றிக் கருத்துக்கூற என்கின்றார்,
இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆதரவாகப் பேரணிகள்
கூட்டியபோது, "பூசணிக்காயாக'' இருந்தாரா?

1983ம் ஆண்டு இலங்கை தமிழ் மக்களுக்கு பாசிஸ்ட்
ஜெயவர்த்தனா இழைத்த கொடுமைகளுக்கு எதிராக தமிழக
மக்கள் கொதித்தெழுந்தனர். தமிழக மக்களின் உணர்வு
களைப் பயன்படுத்தி அரசியல் ஆதாயம் தேட முற்பட்டார்
கருணாநிதி. 'இலங்கையில் உடன் பிறப்பு கொல்லப்படு
கின்றான், இங்கு ஒரு தமிழன் ஆட்சி இருந்தால் இந்தநிலை
வருமா?' என்று கேட்டார். ஆனால் இவர் ஆட்சி செய்த
காலத்தில் தான் குட்டிமணி, ஜெகன் போன்ற போராளிகளை
கைது செய்து சிங்கள ஆட்சியாளரிடம் ஒப்படைத்தார்.
ஆனால் இன்று அதை மறந்து நீலிக் கண்ணீர் வடிக்கின்றார்.



போராளிகளை சமரசமாகச் செல்லுமாறு இந்திய அரசு
நிர்ப்பந்தம் செய்கின்றது. தமிழ் ஈழ விடுதலை அமைப்புக்
களோ, மத்திய, மாநில ஆட்சியாளர்களையே சார்ந்துள்ள
னர். உள்ளூர் கட்சிகளான தி. மு. க., தி. க. வை நாடிக்
கொண்டிருப்பதை விட சர்வ வல்லமையும் படைத்த மத்திய
அரசை சார்ந்து நின்றால் போதும் என்றும் தமிழ் ஈழப்
போராளிகள் நினைத்தனர். எனவே கருணாநிதியைக்
கொஞ்சம் கொஞ்சமாக புறக்கணித்தனர். அத்துடன் இவர்
பெரிதும் நம்பியிருந்த தமிழ் ஈழ விடுதலை இயக்கத் தலைவர்
சிறி சபாரத்தினத்தையும் கொன்று அவர் இயக்கத்தையும்
தடை செய்து விட்டனர் தமிழ் ஈழ விடுதலைப்புலிகள்.

இதனால் வெறுப்படைந்த கருணாநிதி தமிழ் ஈழ
விடுதலை அமைப்புகளையோ, தமிழ் ஈழப் போராட்டத்
தையே பயன்படுத்தி பதவி நாற்காலிகளைப் பிடிக்க முடியாது
என்பதால் ''நான் என்ன சுண்டைக்காய்'' என்கிறார்.
இலங்கைத் தமிழ் மக்களின் நலன் அல்ல, பதவியே இவர்கள்
நோக்கம். பிழைப்புவாதமே இவர்கள் அரசியலாகும். தமிழ்
ஈழ விடுதலை இயக்கங்களைப் பயன்படுத்தி தி.மு.க
ஆட்சிக்கு வந்துவிடக்கூடாதே என்பதற்காகத்தான்
விடுதலை அமைப்புகளுக்கு அண்ணா தி.மு.க. உதவியது.
பாசிஸ்ட் ராஜீவ் உத்தரவிட்டவுடன் போராளிகளை கைது
செய்து ஆயுதங்களை பறிமுதல் செய்தார் பாசிஸ்ட் ராஜீ
வின் பாதம் தாங்கி எம்.ஜி.ஆர். இதன் மூலம் கழகங்களின்
நோக்கம் பிழைப்புவாதமேயன்றி இலங்கைத் தமிழ் மக்க
ளுக்கு உதவுவது அல்ல என்பது அம்பலமாகியுள்ளது.

## பாசிஸ்டுகளின் ஊதுகுழலான இடதுவலது கம்யூனிஸ்ட்கள்

இந்தியாவிலுள்ள 'இடது,' வலது கம்யூனிஸ்ட் கட்சி
களோ ஒரு புறம் திராவிடக் கட்சிகளின் சந்தர்ப்பவாத
நடவடிக்கைகளை அம்பலப்படுத்தவும் தயாரில்லை.
இன்னொரு பக்கம் இலங்கை அரசின் நிபந்தனைகளுக்கு
ஒத்துக் கொள்ள ராஜீவ் அரசு நிர்ப்பந்திப்பதை ஆதரிக்கவும்
செய்கின்றன. மொத்தத்தில் தமிழக மக்களிடம் ஓட்டுக்
களைப் பெற்று பதவி நாற்காலிகளை அடையும் நோக்கத்
துடனேயே இந்த அரசியல் கட்சிகள் முதலில் ஈழப்

www.tamilarangam.net



பிரச்சனையைக் கையிலெடுத்தன. இப்போதோ ''சட்டி சுட்டதடா கை விட்டதடா'' என்று கை கழுவி விட்டன.

ஒரு சரியான திட்டத்தின் அடிப்படையில் மக்களைச் சார்ந்து நின்று மக்களை திரட்டாததால் சிங்கள இனவெறி அரசை எதிர்த்து நிற்க முடியாத நிலை தமிழ் ஈழப் போராளிகளுக்கு ஏற்பட்டது. எனவே தவிர்க்க முடியாமல் தமிழகம் நோக்கிச் சென்றனர். அங்கும் இவர்கள் மக்களையும், புரட்சிகர சக்திகளையும் சார்ந்து நிற்காமல் ஆட்சியாளர்களையும், பிழைப்பு வாதக் கட்சிகளையும் சார்ந்து நின்றனர். அவர்கள் உதவியை நாடினர். இவர்கள் சார்ந்து நின்ற இந்திய அரசு பற்றியும் பிழைப்புவாத அரசியல் கட்சிகளின் யோக்கியதைப் பற்றியும் மேலே பார்த்தோம். இந்நிலையில் பிறந்த மண்ணில் இருந்து விரட்டப்பட்டு திர்க்கதியாக தமிழகத்தில் தஞ்சம் புகுந்த தமிழ் ஈழப்போராளிகள் ''இருதலைக் கொள்ளி எறும்பாக'' அவல நிலையில் உள்ளனர். திரும்பிய பக்கமெல்லாம் ஆதரவு என்ற நிலை மாறி நிச்சயமற்ற தன்மைக்கும். நிர்பந்தத்திற்கும் தமிழகத்தில் ஆளாகியுள்ளனர்.

இந்திய அரசின் உதவியுடனும், இந்திய அரசியல் கட்சிகளின் ஆதரவுடனும் விரைவில் தமிழ் ஈழத்தை அடைந்து விடலாம் என்ற தமிழீழப் போராளிகளின் எண்ணம் இன்று கனவாகிவிட்டது. எனவேமக்களின் நல்வாழ்வு அய்க்கியம், அரசியல் அதிகாரம் என்பவற்றின் மீது உண்மையான அக்கறை கொண்டவர்களாக தமிழ் ஈழப் போராளிகள் இருப்பார்களேயானால் இனி புதிய திசையில் சிந்திக்க வேண்டும். தமிழ் ஈழக் கோரிக்கையை முன்வைத்த தவறையும், இந்திய அரசையும், பிழைப்பு வாதக் கழகங்களையும் சார்ந்து இருந்த தவறையும் உணர வேண்டும்.

தமது கடந்தகாலத் தவறுகளை உணர்ந்து தமிழ்—சிங்கள மக்களின் ஒன்றுபட்ட ஒரு குடியரசுக்காகப் போராடவேண்டும் என்ற புரட்சிகர சிந்தனைப்போக்கு தமிழ் ஈழப் போராளிகளிடம் தோன்றவேண்டும். இருண்ட இலங்கையில் ஒளிக்கீற்றாக,விடிவெள்ளியாக, புதிய சூரியனாகத் தோன்றவேண்டும். இச்சிந்தனைப் போக்கே வரவேற்கத் தக்கதும், வாழ்த்துக்குரியதும் ஆகும்.

இலங்கையில் இன்று காணப்படும் மார்க்சியக் கட்சிகளை மூன்று வகைப்படுத்தலாம் முதலாவது வகையினர்



தொழிற்சங்கங்கள் கட்டி அவற்றின் போராட்டங்கள் மூலம் மிகப்பெரிய புரட்சியே செய்து விட்டதாக பிரச்சாரம் செய்து அதன் மூலம் பாராளுமன்ற பதவி நாற்காலிகளைப் பிடிப்பதையே குறிக்கோளாகக் கொண்டவர்கள். ஏதோ இலங்கைபாட்டாளி வர்க்கத்தின் பாதுகாவலர்கள் தாங்கள் தான் எனத் தம்பட்டம் அடிக்கும் இவர்கள் பதவிக்கு வந்தவுடன் தங்களைப் பதவிக்கு அனுப்பிய பாட்டாளி வர்க்கத்தையே எட்டி உதைத்தவர்கள். இதனால் இன்று மக்கள் மத்தியில் இருந்து தூக்கியெறியப்பட்ட நிலையில் பத்திரிகைகளுக்கு அறிக்கைகள் விடும் புரட்சி (?) வீரர்களாகக் காட்சியளிக்கின்றனர். பீட்டர் கெளமன் தலைமை தாங்கும் ரஷ்ய சார்பு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் கொல்வின் ஆர். டி. சில்வா தலைமை தாங்கும் லங்கா சம சமாஜக்கட்சியும் இதற்கு நல்ல உதாரணங்களாகும்.

இரண்டாவது வகையினர் சண்முகதாசன் தலைமையில் இயங்கும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினர். இவர்கள் பாராளுமன்றப் பாதையை நிராகரித்து புதிய ஜனநாயகப் புரட்சியை வலியுறுத்தினாலும், இன்று காணப்படும் இன முரண்பாட்டைக் கையாளத் தவறிவிட்டனர். தற்போது காணப்படும் இன முரண்பாட்டின் வர்க்க உள்ளடக்கத்தை புறக்கணித்து இன முரண்பாடு நீங்கும் வரை பொறுத்திருக்க வேண்டும் என்றும் போதிக்கின்றனர்.

இன ஒடுக்கு முறைக்கு எதிராகப்போராடி தமிழ்-சிங்கள உழைக்கும் மக்களின் அய்க்கியத்தை ஏற்படுத்த இவர்களிடம் எந்தவிதமான குறிப்பான திட்டமும் இல்லை. இதனால் இவர்கள் இரு இன மக்கள் மத்தியில் இருந்தும் தூக்கியெறியப்பட்டுள்ளனர்.

மூன்றாவது வகையினர் இன முரண்பாட்டுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து புதிய ஜனநாயகத் தமிழ் ஈழம் கோரும் வகையினர். இவர்கள் வர்க்க முரண்பாட்டையும், அடிப்படை முரண்பாடுகளையும் கணிக்கத் தவறிவிட்டனர். தமிழ்—சிங்கள மக்களின் அய்க்கியத்தை சாத்தியமில்லையென்கின்றனர். இவர்களின் புதிய ஜனநாயகத் தமிழ் ஈழமும் தமிழ் பூர்ஷ்வா தேசியவாதக் கோரிக்கையே. எனவே இவர்கள் மார்க்சியமும் வெறும் சந்தர்ப்பவாதமே!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எனவே இந்நிலையில் இன்று இலங்கையில் மிக அவசிய மானதும், முக்கியமானதும் ஒரு பாட்டாளி வர்க்க கட்சியே ஆகும். சந்தர்ப்ப வாதங்களையும், திருத்தல் வாதங்களையும், போலி மார்க்சிய வாதிகளையும் முறியடித்து மக்கள் மத்தியில் இவர்களை இனங்காட்டி தமிழ்—சிங்கள உழைக்கும் மக்களை அய்க்கியப்படுத்தி ஒரு மக்கள் ஜனநாயகக் குடியரசை அமைப் பதற்கு பாட்டாளி வர்க்க கட்சியொன்று அவசியமாகின்றது.

இவ் அவசியத்தை உணர்ந்ததாக தமிழ் மக்கள் பாது காப்பு பேரவை இருக்கின்றது. அது இன்று தன்னுடைய உடனடிப்பணியாக இதை மேற்கொள்கின்றது. அத்துடன் அனைத்து முற்போக்கு சக்திகளையும் இதற்காக அய்க்கியப் படுத்தும் பொருட்டு அதற்கான அறைகூவலையும் விடுக்கின் றது. உண்மையான முற்போக்கு சக்திகள் அனைத்தும் இவ் அறைகூவலை ஏற்று அய்க்கியப்படுவார்கள் என நம்பு கின்றோம்.

எனவே தோழர்களே!

எந்தவித சமரசமுமற்ற இறுதிவரை உறுதியாக போராட்டத்தை முன்னெடுக்க, இன ஒடுக்குமுறைக்கு எதிரான அனைத்து சக்திகளையும் அய்க்கியப்படுத்துவோம்.

வெளியீடு :— தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒரு தேசிய இனத்தின் பாட்டாளி வர்க்கம் "தனது" தேசிய பூர்ஷ்வாக்களின் விசேஷ உரிமைகளைச் சிறிது ஆதரித்தாலும் கூட, இன்னொரு தேசிய இனத்தின் பாட்டாளி வர்க்கத்திடையில் அது கட்டாயம் நம்பிக்கையின்மையைத் தோற்றுவிக்கும்; தொழிலாளர்களின் சர்வதேச ரீதியிலான வர்க்க ஒற்றுமையை அது பலவீனப்படுத்தி, பூர்ஷ்வாக்கள் பூரிப்பு அடையும் வகையில் அவர்களைத் துண்டுபடுத்தும்—

லெனின்,

தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை, பக்கம் 54.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்